குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 52/2023

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.வெங்கடேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.முனியப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | |
| மதம் | : | |
| வயது | : | 45 |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **01.02.2024**

**( 1** முதல் **6** எதிரிகள் ஆஜர்)

முதல் விசாரணை :

நான் முகுலப்பள்ளியில் குடியிருந்து சாலை ஒப்பந்தத்தாராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான், ஆனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. (புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

நீதிமன்ற கேள்வி: இவ்வழக்கில் அரசு தரப்பில் சாட்சி அளிப்பது குறித்து என்னை யாரேனும் மிரட்டினார்களா?

பதில்: இல்லை, எனக்கு தெரிந்த விவரங்களைத்தான் நான் சாட்சியமாக அளித்துள்ளேன்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி சட்டப்படி **161** குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

மேற்படி முகுலப்பள்ளி கிராமத்தில் எனக்கு 8 ஏக்கர் விவசாயம் நிலம் உள்ளதாகவும், அதில் 1 ஏக்கர் 48 செண்ட் நிலம் பன்டப்பள்ளியைச்சேர்ந்த வெங்கட்ராமனப்பா மகன்கள் சீனிவாசன் மற்றும் கோபால் நிலத்திற்கு அருகே உள்ளதாகவும், அதனால் மேற்படி இருவரும் எனது நிலத்தை அவர்களுக்கே விற்கவேண்டும் என என்னிடம் பிரச்சினை செய்து வந்தாகவும், அதனால் நான் பெங்களூரைச் சேர்ந்த ரமேஷ் என்பவருக்கு மேற்படி சொத்தை விற்று விட்டதாகவும், இந்நிலையில் 09.09.2013-ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் ரமேஷ் என்பருடன் எனது நிலத்திற்கு சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தாகவும், அவர்கள் எங்களைப் பார்த்தவுடன் நிலத்துப்பக்கம் வரக்கூடாது எனக் கூறியதாகவும், அதற்கு நான் என் நிலத்திற்கு வருவேன் என கூறியபோது, அங்கிருந்த எதிரிகள் 6 பேரும் என்னை தாக்கியதாகவும் அதில் சீனிவாசன் என்பவர் கட்டையால் எனது தலையின் இடது பக்க மண்டையில் அடித்ததாகவும் அதில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், கோபால் அருகில் இருந்த மற்றொரு கட்டையை எடுத்து வலது கை மீது அடித்ததாகவும், சீனிவாசன் மகன்கள் இருவரும் என்னை கீழே தள்ளி அரிவாளின் அடிக்காம்பால் இடது கால் முட்டியின் எலும்பின் மீது அடித்தாகவும், மேலும் கோபால் அவர் வைத்திருந்த கட்டையால் என் முதுகின் மீது வலது மற்றும்இடது பக்கம் அடித்ததில் தனக்கு உள்காயம் ஏற்பட்டதாகவும் பிறகு எதிரிகள் 6 பேரும் என்னை பார்த்து மீண்டும் நிலத்திற்கு வந்தால் கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் எனது மச்சான் அமரேஷ் என்பவர் ஓசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக மாலை 6 மணியளவில் சேர்த்ததாகவும் பின்பு மேல்சிகிச்சைக்காக அங்கிருந்து ஓசூர் அசோகா மருத்துவமனையில் சேர்த்ததாகவும் அங்கு சிகிச்சையில் இருந்த என்னிடம் பாகலூர் காவல்

நிலைய போலீசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், விசாரிக்கும்பொழுது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களுக்கு சாதகமாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>எதிரிகள் தரப்பில் வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால், அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை :</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.